

ISSN : 2349 - 1914
ஏடே இதழ்
பன்னாட்டு ஆய்விதழ்
International Journal

 ISSN : 2349 - 1914

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாயுமானவர் உள்ளம் – வெ. இராம்ராஜ் | 5 |
| 2. | திருமண வாழ்க்கையில் செவ்வாயின் தாக்கங்கள் – S. கோபிநாத் | 16 |
| 3. | இறைநிலையின் தன்மைகள் – ந. ஜெயக்கொடி – நெறியாளர் : முனைவர் எஸ். பிரசாத் | 21 |
| 4. | வேதாத்திரி மகரிஷி காட்டும் இறைநிலை – செ. தவமணி – நெறியாளர் : முனைவர் பூங்குன்றன் | 26 |
| 5. | அனுராதா ரமணன் நாவல்களில் வரதட்சணை – கி. சுந்தரம் | 32 |
| 6. | மு. வரதராசனார் நாவல்களில் உவமை – க. கார்த்திகேயன் | 37 |
| 7. | முதலாழ்வார்கள் பாசுரங்களில் திருமலை – பி.எஸ். கணேஷ்மூர்த்தி | 41 |
| 8. | கண்ணதாசன் பாடல்களில் இறைமையும் இறையாண்மையும் – இரா. சங்கரேஸ்வரி | 44 |
| 9. | நீதி நூல்களில் மலர்ந்த கல்வியியல் சிந்தனைகள் – செ. சுதா | 48 |
| 10. | இறைவனை நெறிப்படுத்துவதில் தீபத்தின் பங்கு – ப. தேன்மொழி | 50 |
| 11. | பழந்தமிழர் நம்பிக்கைகள்: சூளுரை – க. விஜயராஜ் | 54 |
| 12. | சேரன் திரைப்படங்களில் சமுதாயப் பண்பாட்டுக் கூறுகள் – வீ. அம்பிகா | 58 |
| 13. | தமிழகத்தில் இந்தித்திணிப்புக்கு எதிரான போராட்டங்களும் அதன் தாக்கமும் – மு. பன்னீர் | 61 |
| 14. | ஆற்றுப்படை நூல்களில் முல்லையும், குறிஞ்சியும் – பொ. கலாவதி | 66 |
| 15. | கிறிஸ்துவ அறிஞர்களின் தமிழ் தொண்டு – Y.R. லீமா ரோஸ் | 69 |
| 16. | கவிஞர் மீராவின் பெண் விடுதலைச் சிந்தனைகள் – மே. கலைச்செல்வி | 74 |

 ISSN : 2349 - 1914

17. இளைய சமுதாயத்திற்கு வேதாத்திரியம்
– வே.ச. சுரேஷ் பாபு & சு. இராஜேஸ்வரி 79

18. நற்றிணைக் காட்டும் நற்றாயின் உணர்வு வெளிப்பாடு
– க. கௌரி 84

19. தமிழ் நவீன நாடகம்: இந்திரா பார்த்தசாரதி நாடகப் பனுவலில் பெண்
– ஆ. கனகா 87

20. நானாற்பது காட்டும் வாழ்வியல் நெறிகள்
– சே. வினோத் 91

21. கிறித்தவக் காப்பியக் கொள்கைகளில் மன்னிப்பு
– இ. மேரி இமாகுலேட் ராஜகுமாரி 95

22. ஐந்தில் அளவு முறை
– கா. சண்முகசுந்தரம் 99

23. இசை உருப்படிகள் – (பரதநாட்டியத்தில் பதவர்ணம்)
– வீ. பவானி 102

24. சித்தர்கள் காட்டும் இறைநெறி
– கூ. லதா 107

25. கூடல்
– ர. கோவர்தனன் 110

26. பெரிய புராணத்தில் பெண்ணியம்
– பா. பூங்காவனம் 114

27. பொன்னீலன் நாவல்களில் மொழி
– து. ஜெய்ஸ்ரீ 117

28. வழிபாடு
– த. ஜெயந்தி 121

29. நம்மாழ்வாரும் திருவாய்மொழியும்
– இர. சரோஜினி 124

30. இணையமும் நவீன தமிழ் இலக்கியமும்
– பொ. கவிதா 128

31. திருக்கோவையாரின் தலைவன் புலம்பல்
– மா. சுவாதி & முனைவர் ஸ்ரீலதா 132

32. நாலடியாரின் நட்பியல் மேலாண்மை சிந்தனைகள்
– முனைவர் ம. பிரபாகரன் & கா. அழகுமலை 138

33. சோ. தர்மனின் சிறுகதைகளில் கரிசல் மக்களின் வாழ்வியல் கூறுகள்
– ரெ.மோ. டில்லி & முனைவர் யு. துர்காதேவி 146

ISSN : 2349 - 1914

# சோ. தர்மனின் சிறுகதைகளில் கரிசல் மக்களின் வாழ்வியல் கூறுகள்

**ரெ.மோ. டில்லி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் யு. துர்காதேவி**
உதவிப்பேராசிரியர் & நெறியாளர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை–117.

கரிசல் நில மக்களின் ஒருவரான சோ.தர்மன் நாவல், சிறுகதை, வாழ்க்கை வரலாற்று நூல் போன்றவற்றை எழுதியுள்ளார். மனிதர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிளும் வாழ்கின்ற போதிலும் தட்ப வெப்ப நிலையாலும் இடம் அமைப்பாலும் இயற்கை வளத்தாலும் ஓரிடத்திலிருந்து வாழும் மனிதர்களுக்கும் மற்றொரு இடத்தில் வாழும் மனிதர்களுக்கும் இடையே வேறுபாடு நிலவுகின்றன. அவ்வேறுபாடுகள் களைய வேண்டும் என்றால் கல்வி அறிவு இன்றியமையாத ஒன்று. பிறப்பால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடு இருந்தாலும் படிப்பறிவாள் அனைவரும் ஒன்று. அவ்வாறு கரிசல் நிலம் வானம்பார்த்த பூமியான துயர கீதத்தை இசைக்கும் போது எங்களுக்கு தாங்க முடியாத துக்கம் நெஞ்சை அடைக்கும் என்று எழுத தொடங்கிய கு. அழகிரிசாமி, கி. ரா. ஜெயபிரகாசம், பூமணி, பொன்னீலன், சோ தர்மன், தமிழ்ச்செல்வன், தேவ தர்ஷன், முத்தானந்தம், உதயசங்கர், கௌரி சங்கர் போன்ற எண்ணற்ற எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளது இந்நிலம். அதனால் தான்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றவர் எல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர். குறள் 1033.

விவசாயம் செய்து யாருடைய துணை இன்றி வாழ்கின்ற மனிதனே உரிமையோடு வாழ்கிறான். மற்றவர்கள் எல்லாம் பிறரை தொழுதுண்டு தான் வாழ்கின்றனர் என்றால் வள்ளுவர். விவசாயி சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்று ஒரு பழமொழி உண்டு அப்படிப்பட்ட விவசாயத்தை நாம் பாதுகாப்பதை முதன்மை கடமையாகும்.

## கரிசல் நில மக்கள்

கரிசல் நில மக்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். வானம் பார்த்த பூமி என்ற கரிசல் நிலத்தை கூறுவார்கள். மண்ணையும் மழையும் நம்பி வாழும் இக்கரிசல் நில மக்களின் வாழ்வியல் தனித்தன்மை கொண்டதாகும். கரிசல் நிலம் மண் பற்றி "இரு நிலக்கரம்படைப் படு நீராடி" என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது அது மட்டுமில்லாமல்.வெயிலில் ஏறிக்கொண்டிருக்கும் நேரத்தில் பருத்தி விதையாட்டி மாடுகளுக்கு தண்ணீர் காட்டி கோலம் போட்டுஇ சாணி சகதிகளை அள்ளிப் போடுவார். (சோ தர்மன் விருது கதை பக்கம் எண் 3) இந்நிலத்தில் வாழக்கூடிய மக்களின் வாங்கிய கடனை திருப்பித் தரும் வரை கஞ்சிக்கும் பட்டினியாய் இருந்தாலும் கூட வாயை கட்டி வகுத்த கட்டி எப்பாடு பட்டாலும் சோவென்னா கடனை தீர்த்து விட வேண்டும். (சோ தர்மன் விரைவு கதை பக்க எண் 3) அதுமட்டுமில்லாமல் அம்மா தன் வீட்டில் வளர்க்கும் கோழிகளுக்கும் எப்பொழுதும் குறைந்தது இருபது, முப்பது கோழிகளுக்கு வீட்டில் இருந்து கொண்டே இருக்கும் சாயங்காலம் ஆனதுடன் கம்பங்கஞ்சியும் தவிடும் சேர்த்துப் பிசைந்த உமிக் கலந்த உருண்டைகளை அள்ளி அள்ளி முற்றத்தில் ஏறிவாள்.

## கரிசல் மக்களின் உணவு முறை

இக்கரிசல் நிலத்தில் அதிகமாக கம்பு, குதிரைவாலி போன்ற தானியங்கள் பயிரிடப்படுகின்றன. ஆதலால் கரிசல் நில மக்களின் முதன்மையான உணவாக கம்மங்கூழ், கம்பஞ்சோறு போன்ற உணவுகள் இருக்கின்றன.

ISSN : 2349 - 1914

(சோதர்மன் சிறுகதை பக்கம் எண் 54) சங்கன் கஞ்சி கலயத்தை வாங்கி நீச்சுத் தண்ணீரை மட்டும் குடித்தான். உள்ளே இரண்டு கம்மங் கஞ்சி உருண்டைகள் இருப்பது தெரிந்தது.( சோ தர்மன் சருகுகள் கதை ப.எண். 65) காலையில் வேலைக்குச் சென்று மாலையில் வீடு திரும்பும் போது அம்மாவிடம் சொல்லி இரண்டு கிலோ குறுனாவும் குத்தி போட்ட கம்பம் புல்லும் வாங்கி வருகிறேன் என்று அப்பா கூறினார். (சோ தர்மன் சருகுகள் கதை பக்கம் எண் 65)

நெல்லுச்சோறு என்ற சொல்லை கரிசல் நில மக்களின் அதிகமாக பயன்படுத்துகின்றன. (சோ தர்மன் சருகுகள் கதை பக்கம் எண் 67) தன் வீட்டு விழாவிற்கு வருகை தந்த நண்பன் கருப்புசாமி "சாப்பாடு" மிகவும் நன்றாக இருந்தது என்று கூறினார் (சோதர்மன் சிதைகள் கதை பக்கம். எண் 82). கம்பு, சோளம் குதிரைவாலி திணை சாமை, கேப்பை, உளுந்துபாசி, தட்டைப்பயிறு, கானம் மின்னி, மிதுக்கன், வெள்ளரி, மணத்தக்காளி, பூனைக்கண் பயறு, நிலக்கடலை, துவரை, மொச்சை என்று எத்தனை வகை வெள்ளாமைகள் (சோ தர்மன் இருந்தது கதை பக்கம் என் 219).

**பண்பாட்டுக் கூறுகள்**

ஒரு மரபுக்கலை அழியாமல் பாதுகாக்கப்படும் போது தமிழரின் மரபு மதிக்கப்படுகிறது. அந்த வகையில் பாரம்பரிய மரபை மதித்த நம் சமூக பண்பாட்டினை அடையாளம் காட்டியது கூத்துக் கலைஞர்களாக விளங்கினர். (சோ தர்மன் நிகழ் பார்வைகள் பக்கம் எண் 239). கோவில் விழாக்களிலும்இகல்யாணம் போன்ற சடங்குகளிலும்இசாவு வீட்டிலும் விடிய விடிய தூங்காமல் இருப்பதற்கு கூத்துகள் நடத்தப்பட்டன. பெரும்பாலும் தெருக்கூத்துகள் அழிந்து வருகின்றன.

சமீபத்தில் ஒரு உறவினரின் இறப்பு நிகழ்வுக்கு சென்றேன். அங்கு விடிய விடிய தெருக்கூத்து நிகழ்ந்தது. அதை பார்க்கும்போது பழைய நினைவுகள் திரும்பின. இன்னும் கிராமங்களில் திருவிழாக்கள் நடைபெறும் பொழுது பதினெட்டு நாள் தெருக்கூத்துகள் நடைபெறுகின்றன. பாவைக் கூத்து வண்டி ஊருக்குள் நுழைகிறது. வண்டியை சுற்றி மக்கள் இரவு முழுவதும் ஊர்க் கூட்டம் என்ன கதை படிக்க வைக்கலாம் என்ற விவாதம் எட்டு நாளோ பத்து நாளோ இராமாயணம் என்றால் ராமர் பட்டாபிஷேகம். மகாபாரதம் என்றால் வனவாசம் முடிய அன்று ஊரே விழாக்கோலம்( சோ தர்மன், நிழல்பாவைகள் பக்கம் எண் 241) கர்ணனுடன் போர் செய்ய அர்ஜுனன் ஆயத்தமானான் என்றவுடன் அர்ஜுனனுக்கு பதில் கிருஷ்ணன் போய்விட்டதால் யுத்தம் கிருஷ்ணனுக்கும் கர்ணனுக்கும் நடந்தது. (சோ தர்மன் நிழல்பாவைகள் பக்கம் எண் 244)நீர்

மனிதனின் தேவைகளை ஒன்று நீர்.மனிதன் உயிர் வாழ்வதற்கு அடையாளமான இந்நீரை நாம் பல வழிகளில் பயன்படுத்துகின்றோம். விவசாயத்திற்கு அடிப்படையானது நீர். அதனால் தான் வள்ளுவரும்

**"நீரின்றி அமையாது உலகெனில் யார் யாருக்கு**
**வானின்றி அமையாது ஒழுங்கு" (குறள் 20)**

இவ்வுலகத்தில் நீரின்றி எந்த ஒரு செயலும் நடைபெறாது என்றார் வள்ளுவர்.ஒரு மனிதன் வாழ்வதற்கு நீர் உதவுவது போல நீரின் மீது விண்பழி சுமத்தினாலும் நீர் பழிவாங்கும் என்பதை (சோ தர்மன் நீர்ப்பழி கதையில் பக்கம் எண் 231) அதாவது பேராசிரியர் கிணற்றுகளுக்கு ஆதாரம் குளங்கள், குளங்களுக்கு ஆதாரம் நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகளுக்கு ஆதாரம் ஆறுகள், நதிகளுக்கு ஆதாரம் மலைகளும் அருவிகளும் நீர்வீழ்ச்சிகளும் மலைகளுக்கு ஆதாரம் வானத்திலிருந்து பெய்யும் மழை தான். (சோ தர்மன் தண்ணீரும் பண்பாடும் பக்கம் எண் 376) நடவு முடிந்ததற்கு அடையாளமாய் ஓயாமல் கேட்கும் குலவை சத்தம்.

வெற்றிலைக் கொடிகால்களில் வேலை செய்யும் வண்டு கட்டிய பெண்களின் விடுபாட்டு மடைத் தண்ணீரின் கும்மென்று இறைச்சல் (சோ தர்மன் கழிவுகள் பக்கம் எண் 125) நீர் இல்லாமல்

ISSN : 2349 - 1914

வெள்ளாமையே சரியான காலத்தில் செய்ய முடியாது. சோமசுந்தரம் என்பவர் தன்னுடைய மூன்று ஏக்கர் தோட்டத்தையும் தரிசாய் போட்டு வைத்ததற்கு காரணம் பெரும்பாலும் தண்ணீர் கஷ்டம் தான் (சோ தர்மன் முளைக்கும் சிறகுகள் பக்கம் எண் 39).

**கரிசல் நிலமும் தொழிலும்**

பொதுவாக கரிசல் நிலம் மக்கள் வானம் பார்த்த பூமி என்பார்கள். விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை. அதனால் தான் பெரும்பாலும் மக்களை தொழிலை விட்டு சென்னை போன்ற பெரு நகரங்களில் இடம்பெயர்ந்து ஏதோ கிடைக்கும் வேலையை செய்து பிழைத்து வருகின்றனர். எண்ணமும் சொல்றாமினுட்டுப் பேசாம பழைய தொழிலையே பார்த்து நாலு காசு சம்பாத்தியம் பண்ணுறத விட்டுட்டு இப்படி வந்து ராப்பகலா எதுக்கு சீரழியணும். (சோ.தர்மன் தழும்பு பக்கம் எண் 436). கருப்பட்டியும் ஆவாரம் பூ தூளையும் கலந்து விட்டு அருமையான பானம். ஆனால் இன்றைக்கு இதையெல்லாம் விட்டுவிட்டு டீஇ பால்இகாபி குடிச்சிட்டு பழகிட்டோம். இந்த ஆவார செடியின் கருப்பட்டியும் தருகின்ற பனைக்கும் மழையே வேணாம். தண்ணியே தேவையில்லை, எத்தனை வருடம் மழையே இல்லை என்றாலும் காஞ்சி போகாது.

ஆனால் சீனி (சக்கரை )தருகின்ற கரும்பு அப்படியே தண்ணீருக்குள்ளேயே இருக்கணும். பனையும் ஆவாரம் செடியும் நம்மளோட பூர்வீக தாவரங்கள். ஆனால் இன்றைக்கு அழிந்துக்கொண்டே வருகிறது. (சோ தர்மன் தண்ணீரும் பண்பாடும் பக்கம் எண் 376).அந்த காலத்தில் கருவேல மரம், மஞ்சணத்தி, காட்டாமணக்கு இதையெல்லாம் கிடையாது. இப்போது பெய்கின்ற மழையில் பாதி தண்ணீரை இந்த மரங்களை உறிஞ்சி வீணாக்குகிறது. இவற்றை கருவோட அழிக்கணும். இயற்கை உரம், இலை தழைகள், மாட்டுச்சாணம் இவற்றையெல்லாம் உரமாக போட்டால்தான் அதிக தண்ணீர் தேவை இல்லை. ரசாயன உரங்களைப் போடுவதால் தான் தண்ணீர் மூன்று மடங்கு தேவைப்படுகிறதுஇ (சோ தர்மன் தண்ணீரும் பண்பாடும் பக்கம் எண் 377).

மண்ணும் சாணமும் சேரும்போது மண் நெகிழ்ந்து ஈரப்பதம் அப்படியே இருபது நாள் கூட இருக்குமே ரசாயன உரம் நிலத்தையே நாசமாக்கி நீர் சத்து வலிச்சா உறிஞ்சி உலர்த்தி மண்ணையே தின்று விடும். அதனால் தான் மக்களோட பண்பாடும், வாழ்வு முறையும், விவசாய முறையும் நம்ம கலாச்சாரத்துக்கு ஏத்த மாதிரி மாறும் போது தான் தண்ணீர் பிரச்சனை தீரும் அதற்கு பல வருடங்கள் கூட ஆகலாம். கடுமையான உழைப்பு வேண்டும்.(சோ தர்மன் தண்ணீரும் பண்பாடும் பக்க என் 377) நாம் சாப்பிடும் அரிசி ஆந்திராவிலோ கர்நாடகாவிலோ அல்லது பஞ்சாபிலோ, தஞ்சாவூரில் இருந்து "நெல் நாற்றை" நட்டபோது அல்லா தீர்மானித்து விட்டார். (சோ தர்மன் எனக்கான அரிசி பக்கம் என் 227) கண்ணெட்டும் வரை ஒரே கருப்பு நிறமாய் பறந்து கிடக்கும் இந்த கரிசல் பூமி. ஒரே மழையில் தான் நிலத்தை அப்படியே "பச்சை பசேல்" என்று உருமாறிக் கொள்ளும். கால் பாதங்கள் வைக்கக்கூட கருப்பு தெரியாது.

பச்சை.... பச்சை... என்ற ஒரே பச்சை தான். கம்பு, சோளம், குருத வாலி, தினை, சாமை, கேப்பை, உளுந்து, பாசி, தட்டப்பயிறு, காணும் மின்னி, மிதுக்கன், வெள்ளரி, மணத்தக்காளி, பூனைக்கண் பயறு, நிலக்கடலை, துவரை, மொச்சை என்ற எத்தனை எத்தனை வகையான வெள்ளாமைகள். எல்லாமே ஒரே மழை அல்லது இரண்டு மழையில் விளைந்து விளையக்கூடிய தண்ணீர் தேவையான குறைந்த கரிசல் பிரதேசத்திற்கு உரிய பரம்பரையான பூர்வீக வெள்ளாமைகள். (சோ தர்மன் இருந்தது கதை பக்கம் எண் 219) விவசாயத்திற்கு இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வந்தவர் விஞ்ஞான நாயக்கர் ஊரெல்லாம் டிராக்டர் வந்தாலும் இவர் மட்டும் ஜோடி மாடுகளை வாங்கி கட்டினார்.

மாட்டுச் சாணத்தை தண்ணீரில் கரைத்து விட்டு நீர் பாய்ச்சுவார்.ஒரு சொட்டு மாட்டு மூத்திரம் கூட வீணாகாமல் தொழுவத்தில் பெரிய அண்டாவில் சேர்த்து பயிர் முழுக்க தெளிப்பார்.

ISSN : 2349 - 1914

(சோ தர்மன் கழிவுகள் கதை பக்கம் எண்123 )முன்பெல்லாம் எரிச் சாம்பலை பெட்டி பெட்டியாய் கொண்டு பயிர்கள் மேல் தூவுவார்கள். அது மட்டுமில்லாமல் வேப்பமுத்து சேர்த்து இடித்து தூளாக்கி தூள்களையும் வைப்பார்கள். வேப்பிலைகளை நிறைய பிடுங்கி வந்து ஆட்டு உரலில் ஆட்டிச் சாறு பிழிந்து ஊற்றுவார்கள். இவ்வாறு செய்ததால் செடிகளுக்கு நோயை அண்டாது.(சோ தர்மன் கழிவுகள் கதை பக்கம் 124) ஆனால் இப்பொழுது தொட்டதற்கெல்லாம் மருந்து தெளிப்பதால் உணவே மருந்தாகி விட்டது.

**கல்வியின் அவசியம்**

பெண் கல்வி என்பது மிக முக்கியமான மற்றும் அவசியமானது ஆகும்.பண்டையக் காலத்தில் அடுப்புதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்ற காலம் மாறி இன்று அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றுகின்றன. கல்வி முறைகளை மட்டும் அல்லாமல் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகர் பெண்கள் பணியாற்றுகின்றன. ஒரு பெண் கல்வி கற்றால் அக்குடும்பமே கல்வி கற்றதற்கு சமம் என்பார்கள். சோ தர்மன் சிதறல்கள் என்னும் கதை பக்கம் 280

முத்துசாமி கையெடழுத்து கூட போட தெரியாத படிப்பறிவில்லாத ஒரு ஆண் மகன் பத்தாம் வகுப்பு படித்த கனக்கமாளைத் திருமணம் செய்து கொள்கிறார். வேலை செய்யும் போது கிணற்றுக்கு வெடி வைத்த கனகம்மாவின் வாழ்வையே சிதறியடித்தது. தன்னுடைய கணவனை இழந்த கனகம்மாள் வயிற்றில் ஒரு குழந்தை, கையில் ஒரு குழந்தையை புதுமைப் பெண்ணாக மாறினாள். அதற்கு எல்லாம் துணையாக இருந்தது கல்வி என்னும் செல்வம் தான் சோதர்மன் அடமானம் என்ற கதையில் பக்கம் 851. படிப்பறிவு இல்லாத ஒரு பெண் தன் குடும்ப சூழ்நிலையின் காரணமாக கம்பெனியில் வேலை செய்து வருகிறாள்

விவசாயம் செய்வதற்கு கூட ஒரு நல்ல தண்ணீர் இல்லையே மில்லில் இருந்து வெளிவரும் கழிவுகள் அனைத்தும் குளங்கள் மற்றும் கண்மாய்களில் கலக்கின்றன. இதனால் விவசாயம் செய்ய முடியாமல் தவிக்கும் ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர். அந்நீரில் கழிவுகள் கலப்பதை முதலில் ஒரு மனுவாக எழுதித்தருவோம் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. எனில் அனைவரும் போராட்டங்களில் ஈடுபடலாம் என்று கூறினர் மனுவை எழுதுவதற்கு ஒரு படித்த பையனை தேடினர். ஆனால் படித்த பையனை காணவில்லை இன்னும் சில கிராமங்களில் கல்வி என்னும் கனி எட்டாத உயரத்தில் இருப்பதை உணரலாம் இவ்வாறு கல்வியின் அவசியத்தை சோ தர்மன் தன்னுடைய கதைகளின் மூலம் பல இடங்களில் உணர்த்தியுள்ளார்.

**வறுமையில் பெண்களின் நிலை**

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றான் பாரதி. விவசாயம் செய்ய கடனை வாங்கிய சுப்புக் குட்டி தன் கடனை அடைக்க கஞ்சிக்கும் பட்டினியாக கூட கிடந்தாலும் பரவாயில்லை வாயை கட்டி வகுத்த கட்டி எப்பாடு பட்டினும் இந்த வட்டத்துள்ள சோவென்னா கடனைத் தீர்த்திடும் (சோ. தர்மன் விருவு கதை பக்கம் எண் 3) என்று கூறியதன் மூலம் இன்னமும் பஞ்சமும் பட்டினியும் ஒழியவில்லை என்பது புலனாகிறது.( சோதர்மன் ஈரம் கதை பக்கம் எண் 46) தங்கம்மாள் தன்மகள் சிவகாமி உடன் தனித்து வசித்து வருகிறாள். மூன்று நாள் அடமழையை வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை.

இருவரும் சாப்பிட வழியில்லை மேலும் வறுமை நிலை தலைதூக்கியது. துத்தநாகம் கலந்த மாவை உண்டு மயங்கி இருந்த சிவகாமி மருத்துவமனைக்கு சென்று சேர்த்தால் இறந்து போய்விட்டதாக தகவல் வந்தது. ஒரு கொடிய நோயான வறுமை இந்த தலைவிரித்து ஆடியது. (சோ தர்மன் அழுக்கு பக்கம் என் 95) சிவகாமி ஒரு மாற்றத்திறனாளி பெண் என்பதால் பெண்களுக்கு உதவியாய் ஒரு சில வீடுகளில் வீட்டிலே தங்கி இருப்பாள். ஒரு நாள் வாயில் நுரைத்தள்ளி அவள் அரைக்குறை துணியுடன் இறந்து கிடந்தால் காரை வீட்டு முதலாளி

ISSN : 2349 - 1914

வீட்டின் தான் அதிகம் இருப்பதால் என்ன காரணம் என்று புரியவில்லை அவள் கர்ப்பமாகி இருப்பதாகவும் தகவல் வெளியானது "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" எனக் கூறிக்கொண்டே வீதி வீதியாய் சென்றால் வறுமை நிலையில் இருந்த ஒரு பெண்ணை கொன்ற பாவம் யாரையும் விடாது என்றார்.

**வாழ்க்கையின் எதார்த்தங்கள்**

மருத்துவமனைக்கு வந்த நபர் கை மற்றும் கால்கள் அடிபட்டு இருப்பது ரத்தம் அடைந்து கொண்டிருந்தது. டாக்டரை அழைத்து பரிசோதி செய்வதில் அவருக்கு பலத்த காயம் இருந்ததை அறிந்து போலீசில் தகவல் அளித்து விட்டனர் நோயாளியை கவனித்தனர் அந்த மனிதர் ஒரு திருடன் என போலீஸ் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது தேவதை போல நர்ஸ் வந்தால் அந்த நபரை அன்போடு பாசமாக கனைத்துக் கொண்டாள்.

உன்னை போல் ஒரு திருடன் திருமணத்திற்கு வைத்திருந்த நகை பணம் எல்லாம் எடுத்துச் சென்றதால் இப்பெண்ணின் குடும்பம் சோகத்தில் மூழ்கியது. இதை அறிந்த அத்திருடன்"இந்த நகை மற்றும் பணத்தை அப் பெண்ணின் குடும்பத்திற்கு ஒப்படைங்கள்" என கண்ணீர் மல்க கூறினார்.(சோ தர்மன் சிகிச்சை பக்கம் எண் 160).

கிராமத்தில் வாழும் மக்கள் ஒருவரோடு ஒருவன் இணைந்து வாழ்கின்றன. தாயம்மாள் தன்னுடைய இளம் வயதில் காணாமல் போன தம்பியான காளியப்பன் ஊருக்கு வந்திருப்பதை அறிந்த தாயம்மாள் தன்னுடைய குடும்ப சூழ்நிலையும் தன்னுடைய இரு பிள்ளைகளை தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு வேலைக்கு அனுப்புவதைப் பற்றி கூறி வருந்தினாள்.காளியப்பன் இரு பிள்ளைகளையும் தன்னுடன் அழைத்துச் செல்வதாகவும் கடிதம் மற்றும் பணம் வந்தவுடன் நீயும் மும்பைக்கு வந்துவிடு என்று கூறிவிட்டு சென்றார். ஊருக்குச் சென்ற பிறகு எந்த ஒரு தகவலும் தரவில்லை பணமும் அனுப்பவில்லை. தம்பி என நினைத்து இரு பிள்ளைகளையும் அனுப்பிய தாயம்மா நிலை மிகவும் வருத்தத்தை தெரிவிக்கிறது. (சோ.தர்மன் வலைகள் கதைபக்கம் எண் 167)

**மருத்துவத்துறை**

நாட்டில் வளர்ந்து வரும் துறைகளில் மிக முக்கியமான துறை மருத்துவ துறை ஆகும். "உணவே மருந்து என்ற காலம் மாறி மருந்தே உணவு" என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். சிறுவயதில் என் மகனுக்கு உடல்நிலை சரியில்லாத போது மருத்துவமனையில் அனுமதிக்க பட்டோம். நானும் என் மனைவியும் மூன்று நாட்கள் ஆகியும் என் மகன் தீவிர சிகிச்சை பிரிவிலிருந்து வெளியே அனுப்பவில்லை. என்னுடைய சொந்த பந்தங்கள் வந்து ஆறுதல் பேசிச் சென்றன. நான் வேப்பமரத்தடியில் இருக்கும் விநாயகரை மறக்காமல் என் மகனை நினைத்து அழுது கொண்டிருந்தேன்.

என் பாட்டி வந்தாள் உனக்கு திருமணமாகி ஐந்து வருடம் குழந்தையே இல்லை. உன் பொண்டாட்டி வயதில் நம்ம குலத்தெய்வம் திருநீறு பூசினேன்.அடுத்த ஆண்டு உனக்கு மகன் பிறந்தான். இப்பொழுது படுத்திருக்கும் உன் மகனுக்கு திருநீறு பூசுகிறேன். உன்னுடைய மகன் நன்றாக இருப்பான் என்று கூறிவிட்டு கீழவிச் சென்றாள். மருத்துவத்துறையின் அற்புதம் என் மகன் விழித்துக் கொண்டான் . (சோ.தர்மன் மருந்து பக்கம் எண் 180).

**நீர்ப்பழி**

தாமிரபரணி ஆற்றைப் பார்த்தாலே பசித் தீரும் என்பார்கள். அது போல் ஓய்வு பெற்ற மாவட்ட ஆட்சியாளரான கனகவேல் தன்னுடைய மனைவியுடன் திருமண நிகழ்ச்சிக்கு சென்றார். அப்போது தாமிரபரணி ஆற்று நீர் என்மீது பட்டு ஆடை எல்லாம் நனைந்து விட்டது. விசாலாட்சி என்னை ஆச்சரியமாய் பார்த்தாள். திருமண விழாவில் இலையில் தண்ணீர் தெளிக்க என்னுடைய கை நடுங்கின.

சிறிது பதற்றமும் இருந்தது. என்னை சுற்றி ஏதும் நடப்பது போல பிம்பமாக இருந்தது. ஒருநாள் மனநல ஆலோசகர் டாக்டரை தன்

ISSN : 2349 - 1914

சந்தித்து பேசினேன். தண்ணீரைக் கண்டவுடன் நான் கோபப்படுவதற்கான காரணம் போலவே இவர் பயப்படுவதற்கான ஒரு வலுவான காரணம் இருக்கும் என்பதை டாக்டர் யூகித்தார். நான் ஆட்சியராக இருந்த போது ஒரே நேரத்தில் ஆத்துல முழுங்கி இறந்த பதினேழுப் பேருக்கும் நீச்சல் தெரியாது.நீர்ல மூழ்கி மூச்சு திணறி தான் இறந்தாங்க அப்படின்னு அறிக்கை கொடுத்தீங்களே எப்படி சார். அதில் ஒருவர் என்னுடைய அப்பா.

என் அப்பா சிறுவயதில் இருந்து நீச்சல் நன்றாக தெரியும். பலருக்கு நீச்சல் சொல்லித் தருவார் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் மேல் பொய்யான அறிக்கை தயாரித்த மாவட்ட ஆட்சியர் கனகவேல்யிடம் டாக்டர் கூறினார். எங்கள் அப்பா அடிக்கடி ஒரு விஷயம் சொல்லுவார்."தண்ணீரை யாராலும் ஜெயிக்க முடியாது அதேபோல் தண்ணீரின் மீது யாரும் வீணப்பழிச் சுமத்தினாலும் என்னைக்கிருந்தாலும் தண்ணீரை பழிவாங்காமல் விடாது என்றும் தண்ணீர் வீண் பை ஏற்காது என்றும் சொல்லுவார்". அதேபோல் மறுநாள் கனகவேல் மனைவியிடமிருந்து டாக்டருக்கு போன் வந்தது ஓய்வு பெற்ற மாவட்ட ஆட்சியர் தன் கணவன் கனகவேல் தண்ணீர் விக்கி நேற்று மதியம் இறந்து போனார் என்ற செய்தி.(சோ தர்மன் நீர்ப்பழி பக்கம் எண் 226).

**உறவுமுறை**

உறவுமுறை என்றாலே தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி, அத்தை, அண்ணன், அண்ணி என்று சொல்லிக் கொண்டே போகலாம். அண்ணன் மகளுக்கு திருமணம் ஆனால் மாரியம்மாளுக்கு முறைப்படி அழைப்பு வரவில்லை. தர்மராஜ் வேலை முடித்து வீடு திரும்பியவுடன் மாரியம்மாள் பல கேள்விகளை முன் வைத்தாள்.

கரிசல் நில மக்கள் வாழ்க்கை முறையை படம் பிடித்து காட்டிய சோதனை தன்னுடைய சிறுகதையின் வாயிலாக எடுத்துரைத்தார் மக்களின் உணவு முறை பழக்கவழக்கம் மருத்துவம்இ நீர் உறவு முறை வாழ்க்கையின் எதார்த்தங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்தார் ஒரு மனிதனின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதே தலையாய கடமையாகும்.

**துணை நூற்பட்டியல்**

1. சோ தர்மன் நீர்ப்பழி, அடையாளம் பதிப்பகம் 2020
2. சோ. தர்மன் வாழ்வும் படைப்பும், கோ சந்தன மாரியம்மாள், யாப்பு வெளியீடு 2023. பரிமேலழகர், மாணிக்கவாசகர் பதிப்பகம் சென்னை 18.